1981 ஜனவரி 31]

மேச்சேரி அருகேயுள்ள ஆடு ஆராய்ச்சிப் பண்ணை.

*வினா எண். 130—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை லிப்பாரா:

(அ) மேச்சேரி அருகாமையிலுள்ள பொட்டனேரியில் அமைக்கப்பட்டுள்ள ஆடு ஆராய்ச்சி பண்ணை (Sheep Research Staion) யின் பணி துவக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில் செய்த பணியின் விவரமென்ன?

(இ) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே,

(அ) ஆராய்ச்சிப் பணி 5-6-1978 முதல் துவக்கப் பட்டுள்ளது.

(ஆ) பல்வேறு வகைப்பட்ட பராமரிப்பைப் பற்றி மூன்று ஆராய்ச்சித் திட்டங்கள் முன்னேற்றத்தில் உள்ளன.

(இ) ஆராய்ச்சி நிலையத்திற்கான நிலத்தின் கிரயம், கட்டிட வேலை, தொடரும் மற்றும் தொடராச் செலவினங் களுக்காக இதுகாறும் ரூ. 7.85 இலட்சங்கள் செலவிடப் பட்டுள்ளது.

[முற்பகல் 9-50]

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆடு ஆராய்ச்சிப்பணி மூன்று வகையான திட்டங் களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அந்த மூன்று ஆராய்ச்சித் திட்டங்கள் என்னென்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா

மாண்புமிகு திரு. கா, காளிமுத்து. தலைவர் அவர்களே, (1) மேச்சேரி பெட்டை ஆடுகளின் இனப் பருக்கத்தன்மை பற்றிய ஆய்வு; சிறப்பாக குட்டி கருவிலிருக்கும் காலம் பற்றிய ஆராய்ச்சி. (2) மேச்சேரிக்குட்டிகளுக்கு பாலூட்டும் தடையில் அதிகப் படுத்துவதால் உடல் வளர்ச்சியில் ஏற்படும் பலன்கள். (3) வளரும் மேச்சேரிக்குட்டிகளுக்கு காணாத்கோடிகளை துறை நிறை உணவாகக் கொடுப்பதன் மூலம் ஏற்படும் பயன்கள்.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, மேச்சேரி செம்மறி ஆடுகள் மைசூர் மாநில மாண்டியா ஆடுகளை விட தரத்திலும், இறைச்சியின் சுவையிலும் சிறந்தது. எனவே அந்த மேச்சேரி செம்மறி ஆடுகள் இனத்தை அபிவிருத்தி செய்யும் அளவிலே ஏதேனும் தனித் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? இல்லையெனில் இனிமேலாவது செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இறைச்சியின் சுவை சிறந்தது என்று குறிப்பிடுகிற காரணத்தால், அபிவிருத்தி குறைந்து இருக்கக்கூடும். இருப்பினும், அதனை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அந்த வேளாண்மை ஆராய்ச்சிக்குழுவிற்கு தகவல் அனுப்பப் படும்.

திரு. சு. முத்துகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஆடு ஆராய்ச்சிப் பண்ணை பற்றி அவர்கள் விளக்கம் அளித்தார்கள். அந்த ஆராய்ச்சிப் பண்ணையில் ஆடுகளின் பெருக்கத்திற்காக, ஆராய்வதற்காக மேல்நாடுகளில் இருந்து ஏதாவது ஆடுகள் நம் மாநிலத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா? அந்த ஆராய்ச்சிப் பணிக்குழுவை தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் நிறுவ அரசுக்குத் திட்டம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, திட்டம் இல்லை.

கோவை விவசாயப் பல்கலைக்கழக ஆசிரியர் குறைகள்.

*வினா எண். 131 திரு. குமரமணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை விவசாயப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் குறைகளைப் பரிசீலிக்க ஒரு நபர் விசாரணைக் குழு அமைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்குழுவின் விசாரணைக்கு விடப் பட்டுள்ள விஷயங்கள் என்ன?

(இ) விசாரணை முடிவு எப்பொழுது வெளியிடப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களின் ஊதியங்களைப் பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்துள்ள ஊதிய விகிதங்களில் நிர்ணயம் செய்தல். மேலும் இவர்களது இதுபோன்ற மற்ற விவரங்களைப் பரிசீலனை செய்தல்.